**புறொப்பட்டி டெவலப்மென்ட் பிஎல்சி நிறுவனம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

புறொப்பட்டி டெவலப்மென்ட் பிஎல்சீ நிறுவனத்தின் (“கம்பனி”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது.

கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத்திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்

- பொருத்தமான எழுத்து மூலமான சட்டம், அல்லது கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புக்களுடன் தொகுதி இணங்கியொழுகியிருந்ததா என்பதும்

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும்

- கம்பனியின் வளங்கள் காலவரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | மோசடி தடுப்பு சட்டத்தின் 2 ஆம் பிரிவு, 1840 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க மற்றும் 2022 ஆம் 31 ஆம் இலக்க நோட்டரி சட்டத்தின் திருத்தம் செய்யப்பட்ட விதி 14(30ஏ). | அந்த அறிவுறுத்தலின்படி, சான்றளிக்கும் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்கு முன்னதாக, அவர் சான்றளிக்கப்பட்ட ஒவ்வொரு பத்திரத்தையும் அல்லது கருவியையும் பதிவு செய்வதற்காக பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டியது ஒவ்வொரு நோட்டரி பப்ளிக்கினதும் கடமையாகும்.<br>இருப்பினும், நிறுவனம் குறிப்பிட்ட காலத்திற்குள் காணிப் பதிவாளரின் ரீஜென்சி ஒப்பந்தத்தில் பதிவு செய்யவில்லை. | நாங்கள் இலங்கை வங்கியைத் தொடர்பு கொண்டு, வாடகை ஒப்பந்தத்தை சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் பதிவு செய்ய நடவடிக்கை எடுப்போம். | சான்றளிக்கப்பட்ட ஒவ்வொரு பத்திரத்தையும் அல்லது கருவியையும் குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 793 மில்லியன் தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 650 மில்லியன் தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா. 143 மில்லியன் தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் நிதி வருவாயில் ஏட்பட்ட 182.5 சதவீத அதிகரிப்பேயாகும். மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் வருவாய் 5.7 சதவிகிதம் உயர்ந்த, அதே நேரத்தில் இயக்க செலவுகள் 19.5 சதவிகிதம் அதிகரித்தது, இது வருவாயின் அதிகரிப்பை விட அதிகமாக இருந்தது. இருப்பினும், நிதி வருமானத்தில் ஏட்பட்ட அதிக சதவீத அதிகரிப்பு காரணமாக பாதிப்பு நடுநிலையானது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவு விடயங்களின் பகுப்பாய்வானது அதிகரிப்பு அல்லது குறைவின் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வேறுபாட்டு தொகை அதிகரிப்பு / (குறைவு) (ரூபா.) | வேறுபாடு % | வேறுபாட்டுக்கான காரணம் |
|---|---|---|---|
| வருமானம் | 52,412,823 | 5.7 | 01 ஜுலை 2022 முதல் இலங்கை வங்கியின் தலைமையக கட்டிடத்திற்கான வாடகைக் கட்டணம் சதுர அடிக்கு ரூபா 124 யில் இருந்து ரூபா 132 வாக அதிகரிக்கப்பட்டதன் காரணமாக வருமானம் 5.7 வீதத்தால் அதிகரித்துள்ளது. |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | (28,155,742) | (74) | 2021 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியிடமிருந்து மீளப் பெறப்பட்ட மூலதனச் செலவினம் ரூபா.27,777,778 உட்பட இதர வருமானங்களில் ஏற்பட்டுள்ள குறைவின் காரணமாக ஏனைய செயற்பாட்டு வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 74 வீதத்தால் குறைந்துள்ளது. |
| நேர்ச் செலவுகள் | 36,759,896 | 25.1 | முக்கியமாக 2022 ஆம் ஆண்டில் பராமரிப்பு செலவுகள் 47.1 சதவீதம் அதிகரித்ததன் காரணமாக நேரடி செலவுகள் 25.1 சதவீதம் அதிகரித்துள்ளது. |
| ஊழியர் நலன்களுக்கான் செலவினம் | 33,839,348 | 22.1 | 19.6 சதவீதம் சம்பளம் மற்றும் ஊதிய உயர்வு காரணமாக ஊழியர்களின் நலன்களுக்கான செலவுகள் அதிகரித்துள்ளன. |
| நிதிச் செலவு | 371,794,939 | 182.5 | முக்கியமாக 2022 ஆம் ஆண்டில் நிலையான வைப்புத்தொகைகள் மீதான வட்டி ரூபா.306,800,308 ஆல் அதிகரித்ததன் காரணமாக. நிதி வருமானம் 182.5 சதவீதம் அதிகரித்துள்ளது, |
| வருமான வரி செலவினம் | 173,591,780 | 126.1 | வருமான வரி வீதம் 24 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக உயர்த்தியதன் விளைவாக தற்போதைய வருமான வரி செலவினம் 54.8 சதவீதம் அதிகரித்ததன் காரணமாக வருமான வரிச் செலவுகள் 126.1 சதவீதம் அதிகரித்துள்ளது. |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டினதும் அதற்கு முன்னைய ஆண்டினதும் கம்பனியின் குறிப்பிடத்தக்க முக்கியமான விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதம் | 2022 | 2021 |
|---|---|---|
| தேறிய இலாப விகிதம் (%) | 51.7 | 58 |
| மொத்தச் சொத்துக்களின் மீதான திரும்பல் (%) | 16.6 | 14.7 |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் (%) | 13.8 | 14.1 |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 14.5:1 | 20.7:1 |

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டில் மொத்த சொத்துகளின் வருவாய் விகிதத்தைத் தவிர மற்ற அனைத்து விகிதங்களும் குறைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

பின்வரும் மூலதனப் பணிகளுக்காக 2022 பாதீடு செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், 2022 ஆம் ஆண்டில் பணிகள் செய்யப்படவில்லை.

| | விபரம் | பாதீடு ஒதுக்கம் (ரூபா.000) | குறிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | சில்லர் முகாமை அமைப்பை மேம்படுத்தல் | 4,000 | 2022 ஆம் ஆண்டில் சில்லர் முகாமை அமைப்பை மேம்படுத்துவதற்கான முழு பாதீட்டு ஒதுக்கீடும் பயன்படுத்தப்படவில்லை. | தற்போதுள்ள முறையை இன்னும் 12 முதல் 18 மாதங்களுக்கு பயன்படுத்தலாம் என்பதால், திட்டத்தை 2023 க்கு ஒத்திவைக்க நிர்வாகம் முடிவு செய்தது. | காலதாமதமோ அல்லது முன்னோடியாக பாதீட்டை சரியான நேரத்தில் தயாரிப்பது அவசியம் |
| (ii) | அடித்தளம் 2 முதல் 17வது தளத்திற்கு 11 KV மின் கம்பிகளை மாற்றுதல் மற்றும் 17வது தளத்தில் 11KV ஐசொலேட்டர் பேனலை மாற்றுதல் | 30,000 | அடித்தளம் 2 முதல் 17வது தளம் வரையிலான 11 KV மின் கம்பிகளை மாற்றுவதற்கும், 17வது தளத்தில் 11KV ஐசொலேட்டர் பேனலை மாற்றுவதற்கும் ஒதுக்கப்பட்ட முழு பாதீடும் 2022 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படவில்லை. | 01 ஏப்ரல் 2022 அன்று Minel Lanka (Pvt) Limited நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. நாட்டில் வெளிநாட்டு நாணய தட்டுப்பாடு காரணமாக தேவையான 11KV மின் கம்பிகள் மற்றும் ரிங் மெயின் யூனிட் இறக்குமதிக்கான கடன் கடிதங்களை தயாரித்தல் தாமதமானது. | ஒப்பந்தம் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டதால், தாமதத்தால் ஏற்படக்கூடிய இழப்புகளைக் குறைக்க, பணியை விரைவுபடுத்த முயற்சி தேவை. |

## 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

31 டிசம்பர் 2022 இல் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கும் உண்மையான ஆளணிக்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் காணப்பட்டன. நிறுவனம் பொது வறையறுக்கப்பட்ட நிறுவனமாகப் பதிவுசெய்யப்பட்ட போது, இயக்குநர்கள் குழு 04 ஏப்ரல் 2018 அன்று ஆளணியை அங்கீகரித்துள்ளது. எவ்வாறாயினும், 27 அக்டோபர் 2022 அன்று பட்டியலிருந்து நீக்கப்பட்டதன் காரணமாக நிறுவனத்தின் நிலை பிரைவேட் லிமிடெட் நிறுவனமாக மாறியுள்ளது. நிறுவனத்தின் தற்போதைய நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளுடன் ஒப்பிடுகையில் நிறுவனம் தற்போது அதிகப்படியான பணியாளர்களைக் கொண்டிருப்பதைக் காண முடிந்தது. பட்டியலிருந்து நீக்கப்பட்டதன் பின்னர் நிறுவனத்தின் தற்போதைய நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளை கருத்தில் கொண்டு, நிறுவனத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

| பதவிநிலை | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | 31.12.2022 இல் உண்மையான ஆளணி | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| **நிர்வாக பதவியணியினர்** | | | | 27 அக்டோபர் 2022 முதல் நிறுவனம் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிறுவனத்தின் நிலை பொது வறையறுக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பப்ளிக் லிமிடெட் நிறுவனமாக மாற்றப்பட்டது. புதிய பதிவு எண். PB 00267734 [முன்பு PQ 106]. (தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம் என்ற நிலை மாற்றப்படவில்லை). நிறுவனத்தை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது தொடர்பாக பின்வரும் விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பட்டியலிலிருந்து நீக்கப்பட முன் பங்குதாரர்களின் எண்ணிக்கை - 3415 பட்டியலிலிருந்து நீக்கப்பட சலுகையை ஏற்றுக்கொண்ட பங்குதாரர்களின் எண்ணிக்கை - 525 பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பிறகு பங்குதாரர்களின் எண்ணிக்கை – 2890<br><br>பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பிறகு, மீதமுள்ள அனைத்து பங்குதாரர்களும் பேரேட்டு பங்குதாரர்கள் (சிடிஎஸ் கணக்கு வைத்திருப்பவர்கள் அல்ல) மேலும் அவர்களின் பங்கு தொடர்பான பணிகள் மற்றும் அவர்களின் நிர்வாக விடயங்கள் இப்போது பங்குத் தரகர்களுக்குப் பதிலாக PDL மூலம் அனுப்பப்படுகின்றன. எனவே, பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பிறகு பங்குதாரர்கள் தொடர்பான வேலை குறைப்பு இல்லை, மாறாக அது இப்போது மிகவும் சிக்கலான மற்றும் அதிக அளவு செயல்படுவதாக உள்ளது. மேலும், நிறுவனத்தின் நிலை மாற்றத்தின் காரணமாக | ஆளணி ஒப்புதல் திகதி அதிக இடைவெளியுள்ளதாக உள்ளது, எனவே நிறுவனத்தின் ஆளணி அளவை மதிப்பாய்வு செய்வது அவசியம். |
| தலைமை நிர்வாக அதிகாரி | 1 | 1 | - | | |
| துணை தலைமை நிர்வாக அதிகாரி | 1 | 1 | - | | |
| துணை பராமரிப்பு முகாமையாளர் | 1 | 1 | - | | |
| பொறியியளாலர் | 4 | 3 | 1 | | |
| முகாமையாளர் நிதி/கணக்காளர் | 2 | 1 | 1 | | |
| உதவி கணக்காளர் | 2 | 1 | 1 | | |
| முகாமையாளர் (HR& A) | 1 | 1 | - | | |
| மூத்த நிர்வாகி (HR&A) | 1 | 1 | - | | |
| இரகசிய செயலாளர் | 1 | 1 | - | | |
| பொறியியல் உதவியாளர் | 1 | 1 | - | | |

| | | | |
|---|---|---|---|
| **மொத்த நிர்வாகிகள் பராமரிப்பு பதவியணியினர்** | **15** | **12** | **3** |
| ஜூனியர் தொழில்நுட்ப வல்லுநர்கள் - Gr. II, Gr I மற்றும் பயிற்சியாளர் | 13 | 9 | 4 |
| மூத்த தொழில்நுட்ப வல்லுநர்கள் - Gr. II, Gr I, சிறப்பு Gr II, சிறப்பு Gr.I | 40 | 33 | 7 |
| பொறுப்பாளர் | 4 | 4 | - |
| மேற்பார்வையாளர் | 2 | 2 | - |
| மூத்த செயலாளர் - சிறப்பு Gr, மேற்பார்வை Gr. அதிகாரி Gr. II, Gr. I | 1 | 1 | - |
| ஜூனியர் செயலாளர் - பயிற்சியாளர், எழுதுநர் Gr. II and Gr. I | 1 | 1 | - |
| **மொத்த பராமரிப்பு பதவியணியினர்** | **61** | **50** | **11** |
| **நிதிப் பிரிவு** | | | |
| கணக்குப் பிரிவு | | | |
| எழுதுநர் Gr. II, Gr. I, சிறப்பு Gr. & மேற்பார்வை Gr. | 5 | 3 | 2 |
| செயலாளர் - பயிற்சியாளர், எழுதுநர் Gr. II, Gr. I, சிறப்பு Gr. & மேற்பார்வை Gr | 1 | 0 | 1 |

நிறுவனத்தின் பணியின் நோக்கம் மற்றும் முதன்மை செயல்பாட்டு நடவடிக்கைகள் குறைக்கப்படவில்லை அல்லது மாற்றப்படவில்லை மேலும் அது முழுத் திறனில் தொடர்கிறது.

ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால், கொழும்பு பங்குச் சந்தை (CSE) பட்டியல் விதிகள் PDL க்கு பொருந்தாது, ஏனெனில் நிறுவனம் CSE இன் அதிகாரப்பூர்வ பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.
நிறுவனத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகளுடன் ஒப்பிடுகையில், CSE விதிகளுக்கு இணங்குவதில் ஈடுபட்டுள்ள நிர்வாகப் பணிகள் குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால், நிறுவனம் வணிகத் தொடர்ச்சிக்கு அத்தியாவசியமான ஊழியர்களின் குறைந்தபட்ச தேவைகளை மட்டுமே நிறுவனம் பராமரிக்கிறது.

அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வணிகத் தொடர்ச்சிக்கான பணியாளர் தேவையின் உகந்த அளவைக் குறிக்கிறது. ஒவ்வொரு துறையின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள், ஒவ்வொரு துறையின் ஒவ்வொரு செயல்பாட்டு நடவடிக்கைகளின் பணி நோக்கம், ஒவ்வொரு முக்கிய செயல்பாடுகளைச் செய்வதற்குத் தேவையான திறமையான நிலைகள் போன்றவற்றையும் உள்ளடக்கிய விரிவான பணி-ஆய்வை மேற்கொண்ட பிறகு அங்கீகரிக்கப்பட்ட கேடர் முடிவு செய்யப்பட்டது.
அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையானது வணிகத் தொடர்ச்சிக்கான பணியாளர் தேவைகளின் உகந்த அளவைக் குறிக்கிறது.
ஒவ்வொரு துறையின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள், ஒவ்வொரு துறையின் ஒவ்வொரு செயல்பாட்டு நடவடிக்கையின் பணி பகுப்பாய்வு நோக்கம், ஒவ்வொரு முக்கிய செயலைச் செய்வதற்குத் தேவையான திறன் நிலைகள் போன்றவற்றை உள்ளடக்கிய விரிவான பணி ஆய்வை நடத்துவதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| அதிகாரி Gr. II, Gr. I | 3 | 3 | - |
| கொள்வனவுப் பிரிவு | | | |
| எழுதுநர் Gr. II, Gr. I, சிறப்பு Gr. & மேற்பார்வை Gr. & அதிகாரி Gr. II, Gr. I | 2 | 2 | - |
| ஐரீ பிரிவு | | | |
| எழுதுநர் Gr. II, Gr. I, சிறப்பு Gr. & மேற்பார்வை Gr. & அதிகாரி Gr. II, Gr. I | 2 | 2 | - |
| களஞ்சியம் | | | |
| உதவி ஊழியர்கள் - Gr II, Gr. I, சிறப்பு Gr. | 2 | 2 | - |
| எழுதுநர் Gr. II, Gr. I, சிறப்பு Gr. & மேற்பார்வை Gr. | 2 | 2 | - |
| அதிகாரி Gr. II, Gr. I | 1 | 1 | - |
| பெறுவனவு பிரிவு | | | |
| பெறுவனவு அதிகாரி/ நிர்வாகி | 1 | 0 | 1 |
| எழுதுவிநைஞர் | 1 | 0 | 1 |
| பெறுவனவு பிரிவின் செயலாளர் | 1 | 0 | 1 |
| **மொத்த நிதிப் பிரிவு** | **21** | **15** | **6** |
| **மனிதவள மற்றும் நிர்வாகத் துறை** | | | |
| உதவி ஊழியர் - Gr. I, மேற்பார்வை Gr. | 5 | 5 | - |
| உதவி ஊழியர்- Gr II, சிறப்பு Gr. | 4 | 4 | - |
| எழுதுநர் Gr. II, Gr. I, சிறப்பு Gr. & | 5 | 3 | 2 |

| | | | |
|---|---|---|---|
| மேற்பார்வை Gr. அதிகாரி Gr. II, Gr. I | 2 | 2 | - |
| **மொத்த மனிதவள மற்றும் நிர்வாகத் துறை** | **16** | **14** | **2** |
| **மொத்த ஊழியரகள்** | **113** | **91** | **22** |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

4.1.1 2022 ஆம் ஆண்டில் பாதீட்டு பராமரிப்புச் செலவுக்கும் நிறுவனத்தின் உண்மையான பராமரிப்புச் செலவுக்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் காணப்பட்டன.

| | **விபரம்** | **பாதீட்டு ஒதுக்கம் (ரூபா.)** | **உண்மைச் செலவு (ரூபா.)** | **பாதீட்டுடனான வேறுபாடு (ரூபா.)** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|
| (i) | ஏர் கண்டிஷனிங் மற்றும் மெக்கானிக்கல் வென்டிலேஷன் சிஸ்டத்தின் பராமரிப்பு | 17,300,000 | 6,590,973 | (10,709,027) | மூலதனம் மற்றும் மூலதனம் அல்லாத செலவினங்கள் இடையே தெளிவான வேறுபாடு ஏற்படும் வரை ஏர் ஹேண்ட்லிங் யூனிட்களுக்கான மோட்டார் வால்வுகள் பொருத்தப்பட்ட வழங்கல் மற்றும் நிறுவுதல் தொடர்பான செலவினங்கள், செயல்பாட்டில் உள்ள (WIP) வேலையின் கீழ் சேர்க்கப்பட்டது. இது 2023 ஆம் ஆண்டில் இலாப நட்டக் கணக்கிற்கு செலவுவைக்கப்படும். | பாதீட்டு மற்றும் உண்மையான செலவுகளுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க முயற்சி செய்யுங்கள். |
| (ii) | மின் பராமரிப்பு செலவுகள் | 2,350,000 | 4,640,479 | 2,290,479 | பிரதான குறைந்த மின்னழுத்த சுவிட்ச்கியர் பேனலில் உள்ள 2 பழைய மாதிரி கேஸ் சர்க்யூட் பிரேக்கர்கள் மாற்றப்பட்டன. இந்த பொருட்களை மாற்றுவதற்கு பராமரிப்பு பாதீட்டில் ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை. | |
| (iii) | தீ கண்டறிதல் மற்றும் பாதுகாப்பு அமைப்பு | 1,200,000 | 2,156,847 | 956,847 | ஹோஸ் ரீல் அமைப்பின் சேதமடைந்த ஹோஸ்கள், டிரம்கள், முனைகள் போன்றவை, கட்டிடத்தின் வருடாந்திர தீ ஆய்வு - 2022க்குப் பிறகு தீயணைப்புத் துறையால் பரிந்துரைக்கப்பட்டதற்கமைய மாற்றப்பட்டன. இந்த பொருட்களை மாற்றுவதற்கு பராமரிப்பு பாதீட்டில் ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iv) | ஏனைய நிறுவனங்கள் மற்றும் இதர சேவைகளுக்கான பராமரிப்புச் செலவு | 558,000 | 846,865 | 288,855 | பாதீடு தயாரிக்கும் நேரத்தில் எதிர்பார்த்ததை விட அதிகமான இதர பராமரிப்பு நடவடிக்கைகள் ஏற்பட்டமை. |
| (v) | PABX மற்றும் தொலைபேசி அமைப்பு மற்றும் குரல் பதிவு அமைப்புக்கான செலவு | 100,000 | 538,386 | 438,386 | நிறுவனத்திற்காக வாங்கிய புதிய PABX அமைப்பிற்கு புதிய தொலைபேசி கருவிகள் வாங்க வேண்டி ஏற்பட்டது. இருப்பினும், இந்த வாங்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக பராமரிப்பு ஒதுக்கீடுகள் பாதீட்டில் செய்யப்படவில்லை. |
| (vi) | BOC வேலை தொடர்பான பொருட்களுக்கான செலவு | 6,096,000 | 9,281,480 | 3,185,480 | பாதீடு தயாரிக்கும் நேரத்தில் எதிர்பார்த்ததை விட அதிகமாக பொருட்களின் விலைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது. |
| (vii) | பேகாட்லிப்ட் (Facade Lift) செலவு | 200,000 | 354,511 | 154,511 | பாதீடு தயாரிக்கும் நேரத்தில் எதிர்பார்த்ததை விட அதிகமான பராமரிப்பு நடவடிக்கைகள் ஏற்பட்டது. |
| | **மொத்தம்** | **27,804,000** | **24,409,541** | **(3,394,469)** | |

**4.1.2** சபையால் அங்கீகரிக்கப்பட்ட முக்கிய வேலைத் திட்டங்கள், இலக்குகள் மற்றும் 2022 ஆம் ஆண்டு நிறுவனத்தால் நிகழ்த்தப்பட்ட உண்மையான பணிகள் ஆகியவற்றுக்கு இடையே கணிசமான விலகல்கள் காணப்பட்டன. விவரங்கள் பின்வருமாறு.

| | **விபரம்** | **பாதீட்டு ஒதுக்கம் (ரூபா.000)** | **உண்மைச் செலவு (ரூபா.000)** | **வேறுபாடு (ரூபா.000)** | **குறிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|---|
| (i) | மோட்டார் வால்வுகள் பொருத்தப்பட்ட AHU மற்றும் மத்திய கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு அமைப்பின் வழங்கல் மற்றும் நிறுவுதல் (2021 முதல் தொடர்கிறது) | 15,000 | 15,485 | (485) | ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலகட்டத்தில் ரூபா.15,000,000 பெருமதியான மூலதனச் செலவைச் செய்ய திட்டமிடப்பட்டது. இருப்பினும், உண்மையான வேலை செப்டம்பர் முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் செய்யப்பட்டது. எனவே 6 மாத தாமதமானது ரூபா.485,000 வுக்கு அதிகமான செலவை ஏற்படுத்தியது. | ஜனவரி முதல் ஜுன், 2022 வரையான காலகட்டத்தில் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக ஒப்பந்தப் பணிகளை முடிப்பது தாமதமானதுடன் கோவிட் -19 தொற்றுநோயின் மூன்றாவது அலைக்குப் பிறகு, ஒப்பந்தகாரரான, நோஸ்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நவம்பர் 2021 இல் ஒப்பந்தப் பணிகளை மீண்டும் தொடங்கியது. | மேலும் சிக்கனமாகவும், திறமையாகவும், திறம்பட செயல்படவும் இடைநிலைக் கட்டத்தில் உள்ள பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். |
| (ii) | மாடிகள் 1 மற்றும் 2 இல் லிப்ட் லொபிகளுக்கான புதுப்பித்தல் (2021 முதல் தொடர்கிறது) | 5,500 | 787 | 4,713 | ஜனவரி முதல் ஜுன் வரையிலான காலகட்டத்தில் ரூபா.5,500,000 பெறுமதியான மூலதன வேலை செய்ய திட்டமிடப்பட்டது. இருப்பினும், உண்மையான பணி ஆகஸ்ட், செப்டம்பர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் 7 மாதங்கள் தாமதத்துடன் தொடங்கியது. பணி தொடங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா.787,000 மட்டுமே பயன்படுத்தப்பட்டது.. | சந்தையில் கட்டுமானப் பொருட்களான சுவர் ஓடுகள், கூரை பொருட்கள் போன்றவற்றின் பற்றாக்குறையால், ஒப்பந்தத்தை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டது. | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (iii) | அடித்தளம் 2 மற்றும் 3 இல் உள்ள மையக் கழிப்பறைகளை மேம்படுத்துதல்/ நவீனப்படுத்துதல் மற்றும் மாடி 30 இல் உள்ள வெளிப்புற மையக் கழிப்பறைகள் (2021 முதல் தொடரும்) | 3,500 | | 1,245 | 2,255 | ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் ரூபா.3,500,000 பெறுமதியான மூலதன வேலை செய்ய திட்டமிடப்பட்டது. இருப்பினும் 7 மாதங்கள் தாமதமாக நவம்பர் மாதமே பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் காலதாமதம் காரணமாக ஒதுக்கீட்டில் இருந்து ரூபா.1,245,000 மட்டுமே பயன்படுத்தப்பட்டது. | சந்தையில் தரை ஓடுகள், சுவர் ஓடுகள் சுகாதார பொருத்துதல்கள் போன்ற கட்டுமானப் பொருட்கள் பற்றாக்குறையால், ஒப்பந்தம் முடிவடைவதில் தாமதம் ஏற்பட்டது. |
| (iv) | தீ அபாயத்தினை குறித்துனரக்கூடிய மற்றும் சமிஞ்ஞை அறிவிப்பு அமைப்பின் வழங்கல் மற்றும் நிறுவுதல் (2021 முதல் தொடர்கிறது) | 35,000 | | 41,946 | (8,557) | ஜனவரி முதல் மே வரையிலான காலப்பகுதியில் ரூபா.35,000,000 தொகை பெறுமதியான மூலதன வேலையை செயல்படுத்த திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், இந்த ஆண்டில் செலுத்தப்பட்ட உண்மையான செலவினம் அல்லது அட்டுறு செலவினம் ரூபா.8,557 ஆல் அதிகரித்தது. | 2022 ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக ஒப்பந்தத்தை முடிப்பது தாமதமானதுடன் உண்மையான செலவுகள் ரூபா.41,946,000.00 என திருத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட காலத்திற்கான பாதீட்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு எதிராக உண்மையான செலவுகள் அதிகமாக இருந்தாலும், சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப ஒப்பந்த தொகை அதிகரிக்கவில்லை. |
| | **மொத்தம்** | | **59,000** | **59,463** | | | |